*11*

# வேலையை நன்றாகச் செய்தல்

## [எபேசியர் 6:5-9]

*மனமாற்றப்பட்டவரின் அன்றாட வேலையில் காணும் ஆச்சரியப் படத்தக்க தெளிவான பிரதிபலிப்பு இருக்கும். ஒரு நபர் பாவ இருளின் அதிகாரத்தினின்று அழைக்கப்பட்டு அவர் வெளிச்சத்தில் நடக்கத் துவங்குகிறார், தேவனைப் போல் மாறுகிறார், தன்னுடைய வேலையில் நம்ப முடியாத மாற்றங்களைக் கொண்டு வருகிறார். அப்படியொரு மாற்றம் ஏன் வருகிறது? மனமாற்ற செயல் உயிர்த்துடிப்போடு வாழ்வின் ஒவ்வொரு தோற்றத்தையும் மறுமுறை ஒருமுகப்படுத்துகிறது. மனமாற்றத்துக்குமுன், ஒருவரது வாழ்க்கை சுய விருப்பங்களால் பட்சிக்கப் பட்டிருக்கலாம். மனமாறுதலுக்குப் பின், ஆவிக்குரிய விருப்பங்களுடன் வாழ்கிறார். கிறிஸ்துவுக்கு தனது வாழ்க்கையை ஒப்புக்கொடுப்பதற்கு முன், "இதிலே நான் என்னத்தை [ஆதாயத்தை] பெறமுடியும்?" என்று கேட்பதில் மட்டுமே ஆர்வமாக இருந்திருப்பார். கிறிஸ்துவுக்குள் வந்த பிறகோ, "தேவனை மகிமைப்படுத்தத் தக்க வகையில் நான் இதை எப்படி செய்ய வேண்டும்?" என்று கேட்கிறார்.*

*பாவ இருளைவிட்டு சுவிசேஷத்தின் வெளிச்சத்தினிடத்தில் வரும்பொழுது எவ்வளவு அற்புதமான சுதந்திரம் உண்டாகிறது. சுயநலம் எனும் அடிமைத்தனத்தை விட்டு விடுதலையாகி வந்ததினால் கிறிஸ்தவராகிய உங்களுக்கு புதிய பெலன் அளிக்கப் பட்டுள்ளது. இந்த விடுதலை நமது தனிப்பட்ட உறவுமுறையில் பயன்படுத்தப் பட்டு விளக்கப்படுத்தப்படுகிறது (4:1-32), நமது வாழ்க்கை முறை தெரிவு செய்யப்படுகிறது (5:1-21), நமது குடும்பத்தின் வாழ்க்கை முறையும் மாறுகிறது (5:22-6:4). இப்போதைய வசனப் பகுதியாகிய, 6:5-9ல், ஏவப்பட்ட எழுத்தாளர் விவரித்து எப்படி மனமாற்ற நிகழ்ச்சி ஒரு வல்லமையான சுதந்திரத்தை நாம் வகிக்கும் பதவியிலும் தொழிலிலும் பகிர்ந்தளிக்கிறது என்று எழுதுகிறார்.*

*தேவனுடைய வெளிச்சத்தை பிரதிபலிக்கும் வகையில் கிறிஸ்தவனுடைய பணி செய்யும்முறை அமைந்துள்ளது. ஒரு காலத்தில் ஒரு வேலைக்காரி தன்னை பணிக்கு அமர்த்திய எஜமானிடத்தில் பணிபுரியம்போது வாசல் மிதியடிக்குக் கீழ் பெருக்கி சுத்தம் செய்யும்படி சொல்லப்பட்டதை தொடர்ந்து செய்யாததால் கடிந்து கொள்ளப்பட்டு வந்தாள். அந்த வாலிபப் பெண் கிறிஸ்தவளாக மாறிய பொழுது, அவளுடைய எஜமான் அவளுடைய மனநிலையில் மாற்றம் பெற்றிருப்பதையும் பொதுவான நடத்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதையும் உடனடியாகக் கவனித்தான். வேலைக்காரப் பெண் இப்பொழுது வித்தியாசமாக இருப்பதை அவன் குறிப்பிட்ட பொழுது, அவள் சற்றுத் தடுமாறினாள். அவளது வாழ்க்கையில் அவள் மாற்றம் பெற்றுள்ளதை அவன் எப்படி அறிந்தான் என்று கேட்டாள். அதற்கு எஜமானன், "நீ இப்பொழுது வாசற்படி மிதியடிக்குக் கீழும் பெருக்குகிறாய்" என்றான்![1]*

மனமாறுதல் என்பது பக்திக்குரிய செயல்கள், ஒழுக்க ரீதியான தெரிவுகள், பேசுகிற முறைகள், மற்றும் குடும்ப ரீதியான உறவுமுறையில் மட்டுமே பயன்பாடுள்ளதா? தங்களுடைய மனமாற்றத்துக்கும் செய்யும் வேலைக்கும் சம்பந்தமில்லை என்று அநேகர் நினைப்பதுண்டு. உண்மையில் சில நேரங்களில் மக்கள் தங்களுடைய வியாபாரத்திலோ காரியங்களிலோ கிறிஸ்தவத்துக்கு எந்த சம்பந்தமுமில்லை என்று நினைப்பதுண்டு! இப்படியொரு முடிவை திருமறை போதிப்பதில்லை. கிறிஸ்தவராகிய நீங்கள், பாவ இருளைவிட்டு வாழ்வின் ஒவ்வொரு முகப்பிலும் சத்தியத்தின் வெளிச்சத்திலே நடக்கும்படி வந்துள்ளீர்கள். வெளிச்சத்தில் நடப்பது நீங்கள் செய்யும் பணியிலும் காட்டப் படும் நடத்தையை உள்ளடக்கியது.

இந்தப் பகுதி வசனங்கள் இரண்டு கூட்ட மக்களுக்கு எழுதப்படுகிறது: முறையே வேலை செய்யும் கூட்டம் மற்றும் மேற்பார்வையிடும் எஜமானக்கூட்டம். ரோமர்களின் காலத்தில், இந்தக் கொள்கைகள் அடிமைகளுக்கும் எஜமானர்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. இன்றைய காலக் கட்டத்தில் அதே உபதேசம் பணி அமர்த்தப்படுவோர் மற்றும் பணி அமர்த்துவோர் ஆகியோருக்கு பயன்படுத்தப்படுகிறது. செய்யும் வேலைகளைக் குறித்த காரியத்தில், கிறிஸ்தவர்களாக, நம்மை நாம் வித்தியாசப்படுத்திக் காட்டி நடந்து கொள்வதையே தேவன் எதிர்பார்க்கிறார் என்று இந்த வசனங்கள் தெளிவாக போதிக்கின்றன. மனமாற்றத்தின் விளைவுகளில் அன்றாடப் பணிகளை ஒருவர் செய்வதில் ஏற்படும் மாற்றத்தையும் உள்ளடக்குகிறது.

## பணிக்கு அமர்த்தப்படும் அடிப்படைக் கொள்கை

எபேசியர் 6:5-9ல் பணியமர்த்தும் பொழுது அமர்த்தப்படுபவருக்கும் அமர்த்துபவருக்குமிடையிலான ஆறு சம பயன்பாட்டுக் கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது நீங்கள் கிறிஸ்தவரானபடியால், இப்பொழுது உங்கள் பணி நடத்தையின் ஒழுக்கத்தை உபதேசக் கோட்பாடுகளின்படி கட்டுப்படுத்தி செயல்பட கடமைப்பட்டுள்ளீர்கள். இப்பொழுது நீங்கள் இருளில் இருப்போர் பின்பற்றுகிற நிலைப்பாட்டின்படி பணியாற்றாமலும், பணியை மேற்பார்வையிடாமலும் இருக்க வேண்டியவர். இப்பொழுது நீங்கள் சுடர்விட்டு பிரகாசிக்கிற தகுதிகளுடன் பணியாற்றி, நீங்கள் தேவனுடைய பிள்ளை என்று விளங்கப்பண்ண வேண்டியவர்.

இன்றைய உழைப்பின் பலனில், மேற்பார்வையிடுவோர் வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு ஆனால் அதை நிறைவேற்றாமல் போவது வழக்கத்துக்கு மாறானது அல்ல. பணியாற்றுவோரும் தங்களுக்கு ஊதியமளிக்கும் கம்பெனிகளில் திருடி பிறகு தங்களுடைய பாவத்தின் நடக்கையை நியாயப் படுத்துவார்கள். உண்மை, நேர்மை, வாய்மை ஆகியவை இன்றைய வியாபார உலகில் காணப்படவில்லை என்பது வருத்தமிக்க காரியம். தங்களுக்கு வெட்கம் உண்டாக்கத்தக்கதாக, சில கிறிஸ்தவர்கள் இன்னமும் இருளில் வாழ்பவர்களுக்கு ஒப்பாக தங்கள் வியாபாரங்களை நடப்பிக்கின்றனர். அவர்களுடைய வார்த்தைகளை நம்பமுடியாமலும், அவர்களுடைய உண்மை கேள்விக்குரியதாயும் காணப்படுகிற கிறிஸ்தவ வியாபாரிகள் உள்ளனர். சில பணிபுரியும் கிறிஸ்தவர்கள் பொறுப்பற்றவர்களாகவும், மனஸ்தாபப்படாமல் தாங்கள் பணியாற்றும் கம்பெனிகளை தங்களுக்கு சுகமாக்கிக் கொள்கின்றனர்.

நீங்கள் கிறிஸ்துவினிமித்தம் மனமாற்றப்பட்டிருப்பதால், பின்வரும் கொள்கைகளை உங்கள் பணிகளில் பயன்படுத்தி வியாபார விவகாரங்களில் விளங்கப் பண்ண வேண்டும்.

*கொள்கை 1: பயத்தோடும் நடுக்கத்தோடும் பணிபுரியுங்கள்* (வசனம் 5அ). மற்றவர்களுக்கு பயந்து கொண்டு பணியாற்ற வேண்டும் என்பது இதன் பொருளல்ல. உலகத்தில் தங்கள் வியாபாரங்களைச் செய்வோர் மற்றவர்களுக்கு பயந்து கொண்டு செயல்படுவர்; அவர்கள் யாரோ ஒருவரின் மனதைப் புண்படுத்தி விடக்கூடாதே என்று வருத்தப்பட்டு விற்பனையை இழந்துவிடாமலும், பணிநீக்கம் செய்யப்படாமலும் இருக்க அப்படிச் செய்கிறார்கள். தங்களுக்கு லாபமில்லாமல் போய்விடும் என்று அஞ்சுகிறார்கள். இப்படிப்பட்ட பயங்கள் உலகத் தரத்தோடு ஒத்துப்போகவும் பொறுப்பற்றத் தன்மையை ஊக்கப்படுத்துவதாகவும் ஏதுவாக்குகிறது. நீங்கள் கிறிஸ்தவராக மாறியதால், நீங்கள் பயத்தோடு பரலோகத்தின் தேவன் உங்களுடைய வியாபார பரிமாற்றக் காரியங்களில் உங்கள் சேவை மற்றும் பிறரை நீங்கள் நடத்தும் விதம் ஆகியவைகளைக் குறித்து என்ன சொல்லுவாரோ என்கிற எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும். தன்னுடைய வியாபார விவகாரங்கள் எப்படி அடுத்தவர்களைப் பாதிக்கிறது, என்பதிலே ஒரு கிறிஸ்தவன் அலட்சியமாக செயல்பட்டால், அவர் தேவனுடைய நியாயஸ்தானத்துக்கு முன் நிற்க வேண்டும் என்பதை நினைத்து பயமும் நடுக்கமும் நிறைந்தவராயிருக்க வேண்டும்.

*கொள்கை 2: உங்கள் நோக்கத்தை ஒருமுகப்படுத்துங்கள்* (வசனம் 5ஆ). உங்களுடைய வியாபாரத்தின் நோக்கம் என்ன? பூமியிலே நாம் வாழும் முழுநோக்கமும் தேவனுக்கு கனத்தைச் செலுத்துவது தான் என்பதை மறந்துவிடாதீர்கள் (பிரசங்கி 12:13, 14). இன்றைய உலகம் வெற்றியடைவதிலேயே பட்சிக்கப்படுகிறது. மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள் மற்றும் பேராசையால் நிறைந்திருக்கிறார்கள் (லூக்கா 12:15). அவர்கள் மேலும் மேலும் தங்களுக்குச் சொத்துக்களை சேர்த்து கனத்தை தங்களுடைய ஆத்ம இழப்பிலே பெறுவதிலும் பிடிவாதமாயிருக்கிறார்கள் (லூக்கா 12:16-21). தங்களுடைய வாழ்க்கையின் நோக்கமே பொருளாசை தான் என்ற எண்ணத்துடன் அவை அவனைக் கட்டுப்படுத்த அனுமதிப்பதால் அநேகர் நியாயத்தீர்ப்பு நாளிலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டவர்களாய் நிற்பார்கள். கிறிஸ்தவர்களாகிய நீங்கள், வேலை செய்வதன் நோக்கத்தின் கண்ணோட்டத்தை விட்டு விடாமல் கவனமாயிருக்க வேண்டும். "கிறிஸ்துவுக்கென்று" பிழைப்போர் தங்கள் இருதயத்தின் "உண்மையிலே" பணியாற்ற வேண்டும்.

*கொள்கை 3: நேர்மையை செயல்படுத்துங்கள்* (வசனம் 6 அ). பணியாற்றும் உலகில் தன்னை மேற்பார்வையிடுவோருக்கு முன்பாக அவர்கள் பார்வைக்காக மாத்திரமே வேலை செய்வது ஒரு பொதுவான பிரச்சனை; மேற்பார்வையாளரின் கவனம் வேறுபக்கம் இருக்கும்போது, அவர்களுடைய வேலையில் சுணக்கம் ஏற்படும். தவறான மனோபாவம் வேலை செய்வதன் நேர்மையை கொள்ளையிட்டுவிடும். கிறிஸ்தவராகிய நீங்கள், தேவனுடைய கண்கள் ஒரு நாளின் ஒவ்வொரு நிமிஷமும் உங்களைப் பார்த்துக் கொண்டுள்ளது என்பதை நீங்கள் அறிந்ததே. ஆகையால், நீங்கள் மனச்சாட்சியோடு ஊழியம் செய்யுங்கள் - உங்களோடு இருக்கிறவர்கள் கவனித்துக் கொண்டிருந்தாலும் நீங்கள் தனியாய் பணியாற்றினாலும் உண்மையாய் உழையுங்கள்.

*கொள்கை 4: ஆற்றலுடன் பணிபுரியுங்கள்* (வசனம் 6ஆ). கிறிஸ்தவன் என்றாலே கடின உழைப்பாளி என்று அறியப்பட்டிருக்கிறான். அவன் தன்னை கடின உழைப்புக்காகவே அர்ப்பணித்துக் கொண்டவன், எனவே ஆற்றலுடன் பணிபுரிபவன். மற்றவர்கள் "ஊ - ஹீம்," கொட்டாவி, அலட்சியம் காணப்படுமேயன்றி தங்களுடையபணியிலே எவ்வித ஆற்றலையும் செலவிட மாட்டார்கள். ஆயினும், கிறிஸ்தவன் "தன் இருதய பூர்வமாக" பணிபுரிகிறான்.

*கொள்கை 5: நல்ல எண்ணமுடையவராய் பரவச்செய்யுங்கள்* (வசனம் 7). கிறிஸ்தவன் தன்னை பணியில் அமர்த்தியவனுக்கு நல்லவைகளை செய்து கொடுப்பதன் மூலம், கம்பெனிக்குள்ளாகவும் சமுதாயத்துக்குள்ளாகவும் நன்மையை வருவிக்கிற வேலையைச் செய்கிறான். தான் தவறாக நடத்தப் பட்டாலும் கூட, தொடர்ந்து கடின உழைப்பைக் கொடுக்கிறான். தனக்கு சரியான பாராட்டு கிடைக்காவிட்டாலும் கிடைத்தாலும் உற்சாகத்தோடே தொடர்ந்து தனது பணியாற்றுகிறான். உண்மையில் அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்கிறான் என்று அறிந்து கொண்டிருக்கிறான்! சுயநலமின்மை என்பது பணியமர்த்தப் பட்டவருக்கும் பணியமர்த்தியவருக்கும் ஒரு சவலாக இருந்தாலும், அது கிறிஸ்தவனின் கடமையுணர்வு!

*கொள்கை 6: உங்கள் பிரதிபலனை உணர்ந்துகொள்ளுங்கள்* (வசனம் 8). ஒரு கிறிஸ்தவன் ஆற்றலுடன் பணிபுரிந்து கம்பெனியின் நலனைத் தேடுகிறான், ஏனெனில் நியாயத்தீர்ப்பு நாள் வருகிறது என்று அவன் அறிவான் - தேவனாகிய கர்த்தர் நீதியுள்ள தீர்ப்பைக் கொடுக்கும் நாள் அது. கிறிஸ்தவ பணி ஒழுக்கத்தின்படி உழைத்தவர்கள் ஒரு ஐசுவரியமுள்ள பிரதிபலனை அடைவார்கள். தேவன் அளிக்கும் தீர்ப்பின் பிரதிபலன் அந்தஸ்தையோ பணம் கிடைக்கும் லாபத்தையோ அடிப்படையாகக் கொண்டு அமையாது. நேர்மையான வழியில் கொஞ்சத்தைச் சாதித்திருந்தாலும் அவர்கள் தக்கபலனை அடைவார்கள். அதே வேளையில் உணர்வற்ற ரீதியில் கடுமையான உழைப்பில் அதிகமாக சாதித்தாலும் மற்றவர்கள் எல்லாவற்றையும் இழந்தவர்களாகவே காணப்படுவர். தேவனுடைய வசனம் எச்சரிக்கிறதாவது, "சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும், கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப் பொருளே உத்தமம்" (நீதிமொழிகள் 15:16).

தேவனுக்கு முன்பாக நிற்கப்போகும் சிலர் தாங்கள் நிறையவே சாதித்து விட்டதாக எண்ணிக் கொண்டு நிற்பார்கள், ஆனால் அவை அவர்களை அழிவுக்கு கொண்டுபோய் விடும் சாதனைகள். ஏனெனில் அவர்கள் தேவனுடைய கொள்கைகளின்படி பணியாற்றாதவர்கள். உங்களுடைய அன்றாட வேலைகளில் *என்ன செய்கிறீர்கள், எப்படி செய்கிறீர்கள்* என்பது நித்தியத்துக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது.

## கிறிஸ்தவ பணியாளர்களுக்கான தொடர் வழிகாட்டிகள்

வசனங்களின் இந்தப் பகுதி ஒரு தெளிவான போதனையைப் போதிக்கிறது: வேலை செய்யும் இடங்களில் ஜனங்கள் நடந்துகொள்ளும் விதம் தேவனுக்கு முக்கியமானது. பணிபுரியும் சூழலில் தேவனுக்கு ஊழியம் செய்யமுடியும் என்று சிலர் நினைத்துப் பார்க்காமல் இருக்கலாம். ஆயினும், தேவனுக்குப்

பிரியமான முறையில் ஒரு பணியாளரோ பணியமர்த்தியவரோ பணியாற்ற முடியும் என்பதற்கு உதவ நான்கு வழிகாட்டிகளை பவுல் அளித்துள்ளார்.

*பணிபுரியும் நட்புறவு மரியாதையினால் ஆளப்பட வேண்டும், ஏனெனில் நம்முடைய முழுமையான மரியாதை தேவனுக்குரியது* (வசனங்கள் 5, 6, 9). எல்லா ஜனங்களும் ஒருவருக்கொருவர் மரியாதையை விளங்கப் பண்ண வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். பணியமர்த்தப்பட்டவர் பணியமர்த்தியவருக்கு மரியாதை கொடுக்க வேண்டும். உடன் பணிபுரிவோர் ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்த வேண்டும். பணியமர்த்தியவர் பணியமர்த்தப் பட்டவர்களை அனுசரிக்க வேண்டும். உண்மையான மரியாதை கேட்டு பெற்றுக்கொள்ள முடியாது. மற்றவர்களின் மரியாதையை சம்பாதிக்க இயலாதவர்கள் முறையாக தங்களை நடத்திக் கொள்ளாதபடியால் சிலர் மரியாதையை கேட்டு பெறுகிறார்கள். ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்தவனல்லாதவனுக்காகப் பணிபுரியும் போதும், அதிகாரத்தில் உள்ளவனை கனம்பண்ண வேண்டும் என்று தேவன் சொல்லுகிறார்.

ஒரு கிறிஸ்தவன் உண்மையாகவும் ஆற்றலுடனும் பணியாற்ற வேண்டும். அவனுக்கு எப்படிப்பட்ட தாலந்து இருந்தாலும் ஆற்றலோடு பணிபுரிய வேண்டும். ஒரே காரியத்தை எல்லாரும் செய்வது என்பது நடக்காத விஷயம், ஏனெனில் நம்மெல்லாருக்கும் ஒரே மாதிரியான தாலந்துகள் கொடுக்கப் படவில்லை. கிறிஸ்தவப் பணியாளர்களும் நிர்வாகிகளும் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான காரணத்தைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். கிறிஸ்தவராகிய நீங்கள், தேவனுக்கு மகிமையையும் கிறிஸ்துவைப் பிரியப் படுத்தக் கூடியதாயுமிருக்கிற வழியில் மட்டுமே பணிபுரிய வேண்டியது உங்களுடைய தலையாய நோக்கமாயிருக்க வேண்டும். இதை மனதில் கொண்டு, நீங்கள் உங்கள் திறமைகளை உங்கள் பணியின் அளவீட்டைக் கொண்டு தீர்மானியுங்கள்.

*நம்முடைய பணியின்அர்ப்பணம் அதின் நம்பக தன்மையை பொறுத்து அமைய வேண்டும்* (வசனம் 7). கிறிஸ்தவன் நம்பத்தகுந்த ஒரு பணியாளனாக இருக்க கடமைப்பட்டிருக்கிறான். பணிபுரியும் ஒவ்வொரு பணியாளர் கூட்டத்திலும், சில உறுப்பினர்கள் நம்பத்தகுந்தவர்களாய் இருப்பதற்காக நன்மதிப்பை பெற்றிருப்பார்கள். கிறிஸ்தவன் இந்தக் கூட்டத்தில் ஒருவனாக இருக்க வேண்டும். சில மேலாளர்கள் ஞானம், நியாயம், மற்றும் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் நன்கு அறியப்பட்டிருப்பார்கள். கிறிஸ்தவமேலாளர் அப்படிப்பட்ட மேலாளர்களில் ஒருவராக இருக்க வேண்டும்.

*பணிசெய்யும் நடத்தைக்கு தக்கதாக பிரதிபலன் அளிக்கப்படும்* (வசனம் 8). கிறிஸ்தவன் கடினமாய் உழைக்கிறான், நேர்மையாய் முயற்சிக்கிறான், உண்மையை வெளிப்படுத்துகிறான், தனது சொல்லாலும் செயலாலும் தனது தனித்திறமையை விளங்கப் பண்ணுகிறான், ஏனெனில் கிறிஸ்து தன்னை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று அறிவான். வியாபாரம் செய்யும் ஒருவன் நடந்து கொள்ளும் விதத்தில், ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவதில், அவன் தன்னை சுற்றியிருப்பவர்களை நடத்துகிற விதத்தைக் கொண்டு நியாயந்தீர்க்கப்படுவான். மற்றவர்களை சாதகமாக்கிக் கொள்ளும் வியாபார ஒப்பந்தம் நிமித்தம் கிறிஸ்தவன் பரலோகத்தின் நித்தியத்தை கைவிட்டு விடக்கூடாது. முதலாளியோ

*மணிக்கணத்தில் பணிபுரிவரோ, மேலாளரோ பணியாளர் குழு உறுப்பினரோ, நிர்வாகியோ அல்லது தொழிலாளியோ - எல்லாருமே "எதுவாயிருந்தாலும்" தனது பணியில் நடப்பித்ததற்கு ஏற்ப தேவனிடத்திலிருந்து பலனை பெறுவார்கள்.*

## நிறைவுறும் சிந்தனைகள்

*இருளை விட்டு ஒளியினிடத்தில் வரும்படியான அழைப்பை ஏற்று வந்தவர்கள் உலகத்தில் வாழ்பவர்களைக் காட்டிலும் வித்தியாசமாக நீங்கள் வாழும்படி அவர்களிடத்திலிருந்து பிரிந்து வாழவேண்டும். நீங்கள் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிந்த போது, தேவனுடைய சொந்த ஜனமாக நீங்கள் பிரித்து எடுக்கப்பட்டவர்கள். தொழுகையிலும் மற்றவர்களுக்குச் செய்யும் ஊழியத்திலும் நீங்கள் வேறுபட்டுக் காணப் பட்டாலும், நீங்கள் பணியாற்றும் வகையில் விசேஷித்த வேறுபாடு கண்கூடாகக் காணப்படும்.*

*இப்போது நீங்கள் பணியாற்றும் இடங்களில் உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கும்படி செய்ய முடியும். உங்கள் மேற்பார்வையாளர்களும் அல்லது உங்கள் மேலாளர்களும் நீங்கள் எவ்வளவாய் மாற்றம் பெற்றுள்ளீர்கள் என்பதைக் கண்டு வியப்படைவார்கள். கிறிஸ்தவம் உங்களுக்கு நாளுக்கு - நாள் வேலையில் முற்றிலும் வித்தியாசப்பட்ட ஒரு நோக்கத்தை உங்களுக்குக் கொடுக்கும். தேவன் ஏற்றுக் கொள்ளும் ஒரு பணியாளராகவோ பணியமர்த்தி யவராகவோ நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். கிறிஸ்தவ வேலை ஒழுக்கத்தை நீங்கள் பின்பற்றியதால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாளில் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதை விரும்புவீர்கள். நீங்கள் பணியாற்றும்போது உங்கள் மனதை ஒருமுகப்படுத்தி செயல்படுவதை தளரவிட்டு விடாதீர்கள், பெருமையினால் நீங்கள் உங்கள் முயற்சியால் வெற்றி பெற்றதாக சாத்தான் உங்களைத் தூண்ட இடங் கொடாதீர்கள். தங்கள் வேலையில் நேர்மையற்று நடந்துகொண்டதற்காக சிலரை "அகன்று போங்கள்" என்று சொல்லும் வார்த்தை நியாயத்தீர்ப்பு நாளில் கேட்கும்போது அது எவ்வளவு பயங்கரமானதாயிருக்கும். தவறான பணி ஒழுக்கத்திலிருந்து மனந்திரும்புவோம். எபேசியர் 6:5-9ல் சொல்லப்பட்ட கொள்கைகளினால் ஆளுகை செய்யப்படுவோமாக.*